மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.
2025 ம் ஆண்டு ஜூன் திங்கள் 09 ம் நாள் திங்கள்கிழமை
இடைநிலை மனு எண். 07/2024
இன்
அசல் வழக்கு எண்.68/2021
-------

ராஜாராம் .. மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ராஜம்மாள்
2. ராமுதாய்
3. ராமலட்சுமி .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 02.06.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. M. மைக்கேல் பாரதி, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V.A. விஸ்வநாத், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது கடந்த 31.01.2024 ம் தேதி முடிக்கப்பட்ட பிரதிவாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் ரீ–ஓபன் செய்து உத்தரவிட வேண்டி பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்**–

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கு தீர்ப்புக்காக 22.04.2024 ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. ஷை அசல் வழக்கில் பி.வா.சா.1–யை குறுக்கு விசாரணை செய்யும்போது நேரமின்மையாலும், மனுதாரரது தரப்பு

வழக்கறிஞருக்கு ஏற்பட்ட திடீர் உடல்நல கோளாறுகளாலும் பி.வா.சா.1—டம் பத்திர பதிவு நடைமுறைகள் மற்றும் அவைகள் குறித்து சில கேள்விகளும் வழக்கிற்கு தேவையான கேளாமால் இருப்பது தற்போதுதான் மனுதாரருக்கு தெரிய வந்துள்ளது. மேற்படி கேள்விகளை பி.வா.சா.1—ரிடமிருந்து கேட்டு பெறும்பட்சத்தில் தான் அசல் வழக்கில் தெளிவான முடிவினை எட்டுவதற்கு பேருதவியாக இருக்கும். எனவே தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>**எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்**</u>

**3.1.** எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் மனுவில் ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர ஏனையவற்றை மனுதாரர்/வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுதாரர் தரப்பில் ரீஓபன் மற்றும் ரீகால் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் கடந்த 31.01.2024 ம் தேதி மற்றும் 14.02.2024 ம் தேதியிலும் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்துள்ளார். மேற்படி குறுக்கு விசாரணையில் மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் தான் தாக்கல் செய்துள்ள பிராதில் உள்ள சொத்துக்கள் மற்றும் மற்ற விஷயங்களை பொறுத்தும் முழுமையாக குறுக்கு விசாரணை செய்துள்ளார். பத்திரப்பதிவு நடைமுறைகள் குறித்து பி.வா.சா.1—ஐ கேள்விகள் கேட்பது என்பது தேவையற்றது. எனவே மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள ரீ—ஓபன் மற்றும் ரீ—கால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6.** <u>**தீர்வு**</u>

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. மனுதாரர்/வாதி தரப்பில் பி.வா.சா.1 ஐ மறுதிறவு செய்யவேண்டுமென்று கூறும்

காரணம் என்னவென்றால் மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞருக்கு திடீரென்று ஏற்பட்ட உடல்நலக் கோளாறுகளினாலும், நேரமின்மையாலும் பி.வா.சா.1–டம் பத்திர பதிவு நடைமுறைகள் மற்றும் அவை குறித்து சில கேள்விகள் கேளாமல்இருப்பது தற்போது தான் மனுதாரர்/வாதிக்கு தெரிய வந்ததாகவும், மேற்படி கேள்விகள் கேளமல் விடுபட்டது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே கடந்த 31.01.2024 அன்று முடிக்கப்பட்ட பி.வா.சா.1 ஐ மீண்டும் மறுதிறவு செய்ய வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர்கள் தங்களுடைய ஆட்சேபணையில் மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் பி.வா.சா.1 ஐ பிராதில் உள்ள சொத்துக்கள் சம்பந்தமாகவும், மற்ற விஷயங்களைப் பொறுத்தும் குறுக்கு விசாரணை செய்துள்ளார் என்றும், எனவே பி.வா.சா.1–ஐ மனுதாரர்/வாதி தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை செய்வதென்பது தேவையற்றது என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

**6.3.** மனுதாரர் தரப்பு வழக்கறிஞருக்கு திடீரென்று உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் உரிய நேரத்தில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என காரணம் சொல்லியிருந்தது ஏற்கத்தக்கது. மேலும் பி.வா.சா.1–ஐ மனுதாரர் தரப்பில் 31.01.2024 மற்றும் 14.20.2024 ஆகிய தேதிகளில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு தீர்ப்புக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில் மீண்டும் மறு திறப்பு செய்ய வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவிற்கான போதிய காரணம் சொல்லாத நிலையிலும், வழக்கின் சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரருக்கு வாய்ப்பளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட கால விரயத்திற்கு மனுதாரர் செலவுத் தொகை வழங்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் பிரதிவாதி தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சியம்

மீண்டும் மறு திறப்பு செய்ய அனுமதி அளித்தும் உத்தரவிடப்படுகிறது.

**7. இறுதி முடிவு–**

இறுதியாக மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு செலவுத் தொகை ரூ.300/–ஐ 18.06.2023 ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 18.06.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 09–ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்துார்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்துார்.
இ.ம.எண்.07/2024
இன்
அ.வ.எண்.68/2021
**உத்தரவு**
நாள்–09.06.2025.